# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை - 2023 யூலை

## (204) வணிக முகாமைத்துவம்

---

### பகுதி A

**வினா இல. 01**

இந்த வினா 15 உப பிரிவுகளைக் கொண்டுள்ளது. வினா இல. 01 இற்கான மொத்தப் புள்ளிகள் 25 ஆகும்.

வினா இல. **1.1** தொடக்கம் **1.5** வரையானவற்றுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து, தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுமாறு கூறப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கான சரியான விடையைத் தெரிவு செய்திருந்ததுடன், அவர்களில் அதிகமானவர்கள் தொடர்புடைய அறிவுறுத்தல்களை பின்பற்றியிருக்காமையும் அவதானிக்கப்பட்டது. தெரிவுசெய்யப்பட்ட விடைகளின் இலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிட வேண்டும் என்ற போதிலும் சில பரீட்சார்த்திகள் விடைகளை வினாத்தாளிலேயே அடையாளப்படுத்தி, அவ்வினாத்தாளை விடைத்தாளுடன் இணைத்திருந்தனர். வேறு சில வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் விடைத்தாளில் விடைக்குரிய இலக்கங்களை எழுதுவதற்குப் பதிலாக விடைகளை எழுதியிருந்தனர். அத்தகைய பரீட்சார்த்திகள் தரப்பட்ட அறிவுறுத்தல்களை புரிந்துகொள்ளவில்லை என்பதை அவதானிக்க முடிந்தது.

இல. **1.6** தொடக்கம் **1.10** வரையான வினாக்களில் தரப்பட்ட இடைவெளிகளை நிரப்புவதற்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறிக்குள் தரப்பட்ட இரு விடைகளிலிருந்து தெரிவு செய்து அதனை விடைத்தாளில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமான விடைகளை அளித்திருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் போதிய அறிவைக் கொண்டிருக்காததாலும், பரீட்சைக்கான முன்னாயத்தத்தில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாகவும் போதிய புள்ளிகளைப் பெற்றிருக்கவில்லை.

பரீட்சார்த்திகள் விடைகளை எழுதும்போது தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் விளங்கிக்கொள்கின்ற அதே வேளை பாடத்திட்டத்திலுள்ள பல பகுதிகள் உள்ளடக்கப்படுகின்ற இத்தகைய வினாக்களுக்கு விடையளிக்கும்போது முகாமைத்துவம் பற்றிய நல்ல புரிதலையும் கொண்டிருத்தல் வேண்டும்.

இல. **1.11** தொடக்கம் **1.15** வரையிலான வினாக்களுக்கான குறுகிய விடைகளை விடைத்தாளில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுமாறு கேட்கப்பட்டது.

**1.11** இவ்வினாவில் 'பண்டக்குறி' என்பதால் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்கும்படி கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு மிகவும் பலவீனமான விடைகளை அளித்திருந்தனர். வேறு சில பரீட்சார்த்திகள் விடை எழுதுவதைத் தவிர்த்திருந்தனர். வேறு சிலர் வணிகங்களுடன் தொடர்புடைய வணிகப் பெயர்களை எழுதியிருந்தனர் ஆயினும் பொருளின் பண்டக்குறி பற்றி எழுதியிருக்கவில்லை. இது இந்தப் பகுதிக்கான செயலாற்றுகை மோசமாக இருந்ததைக் காட்டுகிறது.

**1.12** நிறுவனமொன்றின் வேலை வடிவமைப்புக்காகப் பயன்படுத்தப்படும் இரண்டு நுட்பங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. மொத்தத்தில் இதற்காக வெற்றிகரமான விடைகள் அளிக்கப்படவில்லை என்ற போதிலும், சில பரீட்சார்த்திகள் மிகவும் வெற்றிகரமான விடைகளை அளித்திருந்ததுடன் அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**1.13** இந்த வினா, வழங்கல் சங்கிலியொன்றின் இரண்டு பிரதான கூறுகளைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக இரண்டு சம்பந்தப்பட்ட விடயங்களைக் குறிப்பிட்டு, புள்ளிகளைப் பெற்றிருந்தனர் ஆயினும் சில பரீட்சார்த்திகளை விடையெழுதுவதைத் தவற விட்டிருந்தனர்.

**1.14** ஹென்றி மின்ஸ்பேக்கின் கூற்றுப்படி, முகாமையாளர் ஒருவருக்குத் தேவையான தகவல்சார் வகிபாகங்கள் இரண்டைப் பட்டியலிடுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையை அளித்து புள்ளிகளைப் பெற்றிருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் சம்பந்தமற்ற விடயங்களைக் குறிப்பிட்டிருந்தனர், இன்னும் சிலர் விடையெழுதுவதைத் தவிர்த்திருந்தனர்.

**1.15** இந்த வினா 'சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்' என்பதால் கருதப்படுவது யாதென விபரிக்குமாறு கேட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கு விடை எழுதுவதைத் தவிர்த்திருந்ததுடன் சிலர் விடை எழுதியிருந்தனராயினும் அவை தெளிவான விடையாக இருக்கவில்லை.

**எனவே, இந்தப் பகுதிக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மிகவும் மோசமான மட்டத்தில் இருந்தது.**

## <u>பகுதி B</u>

### வினா இல. 02

இந்த வினாவானது ஆபிரஹாம் மாஸ்லோ என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட தேவைப் படிநிலை மற்றும் ஊக்கப்படுத்தல் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. இவ்வினா **(a), (b)** என 2 பகுதிகளைக் கொண்டிருந்ததுடன் 10 புள்ளிகள் இதற்கு ஒதுக்கப்பட்டிருந்தன.

**(a)** இந்த வினாவானது ஆபிரஹாம் மாஸ்லோவினால் அறிமுகப்படுத்தப்பட்ட தேவைப் படிநிலையை ஒவ்வொரு தேவை மட்டத்திற்கும் பொருத்தமான உதாரணத்துடன் விபரிக்குமாறு கேட்டிருந்தது. சில பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியான விடையை அளித்து, அதற்கான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். மேலும், அதிகளவான பரீட்சார்த்திகள் தேவை மட்டங்களை இனங்கண்டிருந்த போதிலும் பொருத்தமான உதாரணங்களை வழங்கத் தவறியிருந்தனர். அத்துடன் சில பரீட்சார்த்திகள் உயர், மத்திமம், கீழ் மட்டங்கள் எனவும் சிலர் முதன்மை, இரண்டாம்நிலை மற்றும் மூன்றாம்நிலை மட்டங்கள் எனவும் தேவை மட்டங்களை பிழையாகக் குறிப்பிட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் பாதுகாப்புத் தேவைகளுக்கான உதாரணங்களை வழங்குவதற்குத் தவறியிருந்தனர். மேலும், உரிய விடயங்களை விடைகளாக முன்வைக்காது நீண்ட நெடிய விடைகளை முன்வைத்திருந்தனர்.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

**(b)** இந்தப் பகுதியில், எந்தவொரு நிறுவனத்திற்கும் ஊக்கப்படுத்தல் ஏன் முக்கியமானது என்பதற்கான காரணங்களை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்திருந்ததுடன் உரிய புள்ளிகளையும் பெற்றுக்கொண்டனர். மேலும், சில பரீட்சார்த்திகள் ஊக்கப்படுத்தல் வழிமுறைகள், ஊக்கப்படுத்தலின் அனுகூலங்கள் போன்றவற்றை விடைகளாக முன்வைத்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை உயர் மட்டத்தில் காணப்பட்டது.**

### வினா இல. 03

இவ்வினா புத்திசாதுரியமான தீர்மானமெடுத்தலின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்வதையும் முகாமையாளர் ஒருவரின் தொழிலை விருத்தி செய்வதற்கான எதிர்கால ஆற்றல் பற்றியும் வினவியது.

**(a)** இவ்வினா புத்திசாதுரியமான தீர்மானமெடுத்தலைப் பின்பற்றும்போது முகாமையாளர்கள் எதிர்கொள்ளும் நான்கு தடைகளைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்து, அதற்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் தீர்மானமெடுக்கும்போது முகாமையாளர்கள் எதிர்கொள்ளும் தடைகளாக பல மாற்றுத் தீர்வுகளிடையே சிறந்த மாற்றுத் தீர்வைத் தெரிவு செய்தல், தடைகள் ஒரு பிரச்சினை என்பதுபோன்ற சம்பந்தமற்ற விடைகளை அளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் தடைகளைக் குறிப்பிடுவதில் கவனம் செலுத்தாது தேவையற்ற விடயங்களை விபரமாக எழுதியிருந்தனர்.

**(b)** இந்த வினா, நவீன தலைவர் ஒருவரின் வெற்றியைத் தீர்மானிக்கின்ற நான்கு தலைமைத்துவ சிறப்புக் காரணிகளை விபரிக்குமாறு கேட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் தலைவர் ஒருவரின் பண்புகளைக் குறிப்பிட்டிருந்ததுடன் விபரிப்புகள் எதனையும் வழங்கவில்லை. வினாவில் கேட்கப்பட்டது போன்று வெற்றிகரமான தலைவர் ஒருவரின் பண்புகளை எவ்வாறு கையகப்படுத்துவது என்பதை விபரிப்பதில் பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை குறைவான மட்டத்திலேயே இருந்தது.

**ஒட்டுமொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

### வினா இல. 04

இவ்வினா மூன்று பகுதிகளைக் கொண்டது.

**(a)** நிறுவனத்தின் வடிவமைப்பைப் பாதிக்கின்ற 3 காரணிகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. இதற்கு மிகவும் இலகுவாக விடையளிக்கக்கூடியதாக இருந்த போதிலும் ஒட்டுமொத்தத்தில் முன்வைக்கப்பட்ட விடைகள் மிகவும் மோசமான மட்டத்தில் காணப்பட்டது.

**(b)** ஹோட்டல் ஒன்றின் செயற்பாட்டு முகாமைத்துவச் செயன்முறையிலுள்ள தரப்பட்ட முன் திட்டமிடல் நடவடிக்கைகளுக்கு ஒவ்வொரு உதாரணம் தருமாறு கேட்கப்பட்டது. இது மிகவும் இலகுவான ஒரு வினாவாகும். பரீட்சார்த்திகள் தமது நடைமுறை அறிவைக் கொண்டு

வினாவில் கேட்கப்பட்டதை விளங்கிக்கொண்டிருப்பின் இலகுவாக புள்ளிகளைப் பெறுவதற்கான சிறந்த வாய்ப்பாக இதனைக் கருத முடியும்.

(i) வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் – உணவு வழங்கல்

(ii) கொள்ளளவுத் திட்டமிடல் – அறைக் கொள்ளளவு

(iii) தளவமைப்புத் திட்டமிடல் – திட்டமிடல் தொடர்பான நிகழ்வுகள்

(iv) தர முகாமைத்துவம் - உணவு மற்றும் சேவைகளின் தரம்

இந்தப் பகுதிக்கு பரீட்சார்த்திகள் மிகக் குறைந்த மட்டத்திலேயே விடை அளித்திருந்தனர். ஆயினும் மிகச் சில பரீட்சார்த்திகள் உரிய முறையில் விடயங்களை முன்வைத்து இதற்காக ஒதுக்கப்பட்டிருந்த புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**(c)** வணிகச் செயற்பாடுகளில் ''கட்டச் சங்கிலித் தொழினுட்பத்தைப்'' பயன்படுத்துவதால் ஏற்படும் மூன்று அனுகூலங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. இதற்காக அளிக்கப்பட்ட விடைகள் மிக மோசமான மட்டத்தில் காணப்பட்டன. இந்த வினாவுக்கு விடையளிப்பதை பெரும்பாலான பரீட்சார்த்திகள் தவிர்த்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

## வினா இல. 05

இந்த வினா ஊழியர் ஊக்கம் மற்றும் தொடர்பாடல் பற்றிப் பரீட்சித்திருந்தது.

**(a)** இவ்வினாவானது வணிக நிறுவனங்களுக்கு கீழ்நோக்கிய தொடர்பாடல் தேவைப்படுவதற்கான இரண்டு நோக்கங்களைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. பரீட்சார்த்திகள் இதற்கு விடையளித்திருந்த போதிலும் சரியான விடைகளை அளித்திருந்தவர்கள் மிகச் சொற்ப அளவிலேயே இருந்தனர். வினா பற்றிய பரீட்சார்த்திகளின் புரிதல் போதிய அளவில் காணப்படாததன் காரணமாக, அளிக்கப்பட்டிருந்த அதிகளவான விடைகள் புள்ளிகளைப் பெறுவதற்கான வகையில் அமைந்திருக்கவில்லை. மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கை யிலான பரீட்சார்த்திகளே சரியான விடையை அளித்திருந்தனர் எனினும் ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மட்டம் குறைவானதாக இருந்தது.

**(b)** இங்கு செயலாற்றுகை மதிப்பீட்டில் உள்ள படிமுறைகளை (செயன்முறைகளை) விபரிக்குமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவைப் புரிந்து கொள்ளவில்லை. செயலாற்றுகையின் படிமுறைகளை எழுதுவதற்குப் பதிலாக பிரச்சினைகளை தீர்ப்பதற்காக படிமுறைகள், ஊழியர்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான படிமுறைகள் போன்ற பல்வேறு சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விடை அளிக்கவில்லை. செயலாற்றுகை மோசமானதாக இருந்தது.

**(c)** இந்த வினாவில், கைரேகை இயந்திரத்தை அறிமுகப்படுத்துவதன் காரணமாக ஊழியர்கள் காட்டக்கூடிய சாத்தியமான நடத்தைசார் விளைவுகள் இரண்டினைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. இது மிகவும் நடைமுறை சார்ந்த ஒரு வினாவாகும். நடைமுறை சார்ந்த போதிய அறிவு காணப்படாமையை அவதானிக்க முடிந்தது. எவ்வாறாயினும் சில பரீட்சார்த்திகள் இரண்டு விளைவுகளைக் குறிப்பிட்டு புள்ளிகளைப் பெற்றிருந்தனர். இது அதிகளவான பரீட்சார்த்திகள் மோசமான மட்டத்தில் விடையளித்திருப்பதைக் காட்டுகிறது.

**ஒட்டுமொத்தத்தில், இந்த வினாவுக்கு மிகக் குறைந்த மட்டத்திலான செயலாற்றுகை காணப்பட்டது.**

**வினா இல. 06**

இந்த வினா பாடத்திட்டத்திலுள்ள தந்திரோபாய முகாமைத்துவப் பகுதியைப் பரீட்சித்திருந்தது. இது மூன்று பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

**(a)** இவ்வினா, மைக்கல் போட்டரின் கூற்றிற்கிணங்க சந்தையில் நிலைநிறுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் இரண்டு பொதுவான போட்டித் தந்திரோபாயங்களை விபரிக்குமாறு கேட்டிருந்தது. அளிக்கப்பட்ட விடைகள் மோசமான மட்டத்தில் இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. பரீட்சார்த்திகள் கிரயத் தலைமைத்துவம் மற்றும் வேறுபாடுகளைக் குறிப்பிட்டு, ஓரளவுக்கு விபரித்திருப்பின் முழுப் புள்ளிகளையும் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு காணப்பட்டது. பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக் கொள்ளவில்லை.

**(b)** இங்கு ஊழியர்கள் பொதுவாக நிறுவனமொன்றின் புதிய முயற்சிகளை ஏன் எதிர்க்கிறார்கள் என்பதற்கான இரண்டு காரணங்களை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. இது ஒரு நடைமுறை சார்ந்த வினாவாகவும் புள்ளிகளை இலகுவாகப் பெறக்கூடிய வினாவாகவும் இருந்த போதிலும் பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடைகளை அளித்திருக்கவில்லை. அத்துடன் ஊழியர்கள் குறிப்பிட்ட சலுகைகளை எதிர்பார்த்து வேலையை மாற்றுகின்றனர் என்பது போன்ற சில விடைகளையும் காணக்கூடியதாக இருந்தது.

**(c)** அன்சாப் மெட்ரிக்ஸ் இன் கூற்றுப்படி, தந்திரோபாயத் தெரிவுகளின் இரண்டு வகைகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. இதற்கான பரீட்சார்த்திகளின் விடைகள் வெற்றிகரமானதாக அமையவில்லை. பரீட்சைக்கு முன்னர் பாட உள்ளடக்கத்தை நன்றாகப் படித்திருந்தால் இதுபோன்ற வினாக்களுக்கு வெற்றிகரமாக விடையளித்திருக்க முடியும். ஓரளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்து புள்ளிகளைப் பெற்றிருந்தனர். அதிகமானவர்களின் விடைகள் மோசமான மட்டத்தில் காணப்பட்டது.

## <u>பகுதி C</u>

**வினா இல. 07**

இது கட்டாயமான விடய ஆய்வு வினாவாகும். இதற்கு 25 புள்ளிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. இந்த வினா கோட்பாட்டு ரீதியான விடயங்களை எவ்வாறு பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்துடன் தொடர்புபடுத்துகின்றனர் என்பதைப் பரீட்சிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்தது. இவ்வினா **(a), (b), (c), (d), (e)** என 5 பகுதிகளைக் கொண்டிருந்தது.

**(a)** இவ்வினா, கம்பனியின் தற்போதைய அமைப்பை மாற்றியமைப்பதற்கு புதிய நிறைவேற்று அணி வெளிப்படுத்திய நான்கு தலைமைத்துவப் பண்புகளை இனங்காணுமாறு கேட்டிருந்தது. விடய ஆய்வின் உள்ளடக்கத்தின்படி, அதிகளவான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்து அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நான்கு புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

தெளிவான நோக்கொன்றைக் கொண்டிருத்தல், வெளிப்படைத்தன்மை, அர்ப்பணிப்பு மற்றும் திறந்த தொடர்பாடல் திறன்கள் என்பன பல பரீட்சார்த்திகளால் விடைகளாக வழங்கப் பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக, ஊழியர் ஊக்கம், நுண்ணறிவு, நம்பகத்தன்மை மற்றும் பணிக்காக ஊழியர்களை வழிப்படுத்துவதற்கான ஆற்றல் என்பனவும் விடைகளாக வழங்கப்

பட்டிருந்தன. இதனை புரிந்துகொள்வதற்கும், விடையளித்துத் புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்குமான ஓர் இலகுவான வினாவாகக் கருத முடியும்.

**(b)** இவ்வினா, தந்திரோபாயத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தலைமைத்துவம் ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று காரணங்களை விபரிக்குமாறு கேட்டிருந்தது. இதற்கு, வணிக நோக்கங்கள், புத்தாக்கம், நிலைபேறான அபிவிருத்தி போன்றவற்றை அடைந்து கொள்வதற்காக என்பது போன்ற விடைகளை பரீட்சார்த்திகள் அளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு, தந்திரோபாயத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு, குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கு மற்றும் திட்டங்களை நடைமுறைப் படுத்தும்போது அவற்றைத் திருத்துவதற்கு என்பது போன்ற விடைகளை அளித்திருந்தனர். இந்தப் பகுதியும்கூட விடையை இலகுவாக இனங்காணக்கூடியதாகவும் இலகுவாக விடையளித்து புள்ளிகளைப் பெறக்கூடிய பகுதியாகவும் இருந்தது. இங்கு மிகத் தெளிவாக விடயங்களை முன்வைத்து பெரும்பாலான பரீட்சார்த்திகள் முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். செயலாற்றுகை மட்டம் உயர்வாகக் காணப்பட்டது.

**(c)** இந்த வினா **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனிக்கான** சந்தைப்படுத்தலில் இலக்கு வைத்தலின் முக்கியத்துவத்தை விபரிக்குமாறு கேட்டிருந்தது. வெவ்வேறு பண்புகளுடன்கூடிய முழுச் சந்தையிலிருந்தும் வாடிக்கையாளர்களின் மிகவும் கவர்ச்சிகரமான மற்றும் இலாபகரமான துண்டத்தைத் தேர்ந்தெடுப்பதே இலக்கு வைத்தலின் முக்கியத்துவமாகும். விடையானது கிரயக் குறைப்பு, விற்பனை வளர்ச்சி, வாடிக்கையாளர் திருப்தி மற்றும் தமது சந்தை பற்றிய தெளிவான புரிதல் ஆகியவற்றை உள்ளடக்க வேண்டும்.

இங்கே, பெரும்பாலான பரீட்சார்த்திகள் சந்தை இலக்குவைத்தல் பற்றிப் புரிந்து கொண்டிருந்தனர். இதனால் பரீட்சார்த்திகள் இலக்கு வாடிக்கையாளர் துண்டத்தை அறிமுகப்படுத்தியிருந்ததுடன் முக்கியத்துவம் பற்றி குறைவாகவே விளக்கியிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் மொத்தப் புள்ளிகளில் அரைவாசியை மாத்திரமே பெற்றிருந்தனர். பாடத்தை நன்றாகப் படித்திருந்த பரீட்சார்த்திகளுக்கு இது மிகவும் இலகுவான ஒரு வினாவாக அமைந்திருந்தது. எவ்வாறாயினும் பல பரீட்சார்த்திகள் முழுமையான புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்கான போதியளவு விடைகளை வழங்கியிருக்கவில்லை.

**(d)** இவ்வினா **வரையறுக்கப்பட்ட XYZ** கம்பனியின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு தந்திரோபாயத் திட்டம் எவ்வாறு உதவும் என்பதை விபரிக்குமாறு கேட்டிருந்தது.

இந்தப் பகுதிக்கு விடையளிக்கும்போது, பல பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கியிருக்கவில்லை. அவர்களிடம் தந்திரோபாயத் திட்டத்தின் முக்கியத்துவம் பற்றிய புரிதல் இல்லை என்பதை அது உறுதிப்படுத்தியது. செயலாற்றுகை மந்தமானதாக இருந்தது.

**(e)** நிறுவனமொன்றின் ஊழியர்களை ஊக்கப்படுத்த ஒரு வெகுமதி நிகழ்ச்சித் திட்டம் எவ்வாறு உதவும் என்பதை விபரிக்குமாறு கேட்கப்பட்டது.

ஊழியர்களை ஊக்கப்படுத்துவதற்காக நிறுவனத்தினால் வழங்கப்படக்கூடிய வெகுமதிகள் தொடர்பில் பரீட்சார்த்திகள் விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், ஊழியர்கள் ஊக்கத் தொகைகள், சேமநல வசதிகள் மற்றும் பிற நன்மைகள் போன்றவற்றின் ஊடாக ஊக்கப்படுத்தப்படலாம் என்பதை பரீட்சார்த்திகள் விளங்கிக் கொண்டிருக்கவில்லை.

------

**<u>பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தையும் ஆற்றல் மட்டத்தையும் மேம்படுத்தும் பொருட்டு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான காரணிகள்</u> :**

**(1)** பாடத்திட்டத்தை/ பாடப்புத்தகத்தை நன்கு படிக்கவும்.

**(2)** வினாத்தாளைப் பெற்றவுடன் அறிவுறுத்தல்களை கவனமாக வாசிக்கவும் (இந்நோக்கத்திற்காக கூடுதல் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது).

**(3)** பரீட்சார்த்திகள் வினாவை பல தடவைகள் வாசித்து, எதனை விபரிக்க வேண்டும் என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். நேரடி விடையொன்று எதிர்பார்க்கப்படும்போது விடைகள் துல்லியமாக வழங்கப்பட வேண்டும். தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும்.

**(4)** விடைகள் ஒரு மொழியில் மாத்திரம் எழுதப்பட வேண்டும். இந்த மொழிமூலமானது நீங்கள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது விண்ணப்பித்த மொழிமூலமாகவே இருத்தல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு வினாவுக்குமான விடைகளை எழுத ஆரம்பிக்கும்போது விடைப் புத்தகத்தின் ஒரு புதிய பக்கத்தில் எழுத ஆரம்பிக்கவும்.

**(5)** பரீட்சையின்போது நேரத்தை வினைத்திறனான முறையில் பயன்படுத்தவும்.

**(6)** விடைப் புத்தகத்தை கையளிப்பதற்கு முன்னர், எல்லா வினா இலக்கங்களையும் இரு முறை பரீட்சிப்பதுடன் சுட்டெண் சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதையும் பரீட்சிக்கவும்.

**(7)** “செயல் வினைச்சொல் செவ்வை நிரல்'' வினாத்தாளின் இறுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் வினைச்சொல் ஒன்றைக் கொண்டிருக்கும். பரீட்சார்த்திகள் அந்தச் செவ்வை நிரலில் தரப்பட்ட வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு விடையளித்தல் வேண்டும்.

**(8)** கையெழுத்து தெளிவானதாக இருப்பதையும் வினா இலக்கங்கள் ஒவ்வொரு விடைக்கும் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதையும் உறுதிப்படுத்துங்கள்.

**(9)** AAT இனால் வெளியிடப்பட்ட சுய கற்றல் பாடப் புத்தகத்தையும் கட்டுரைகள், சஞ்சிகைகள் போன்றவற்றையும் வாசிப்பது முக்கியமானதாகும்.

**(10)** கடந்தகால வினாத்தாள்களுக்கும் முன்னோடி வினாத்தாள்களுக்கும் விடையளித்து பயிற்சி பெறுவது அறிவை மேம்படுத்த உதவும்.

**(11)** சித்தியடைகின்ற உறுதியான நேர்மறையான மனநிலையுடன் பரீட்சையை எதிர்கொள்ளுங்கள்.

-***-